## மார்ச் - 15

**"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்"**

**-எபி 10 : 38**

விசுவாசத்தினாலே நாம் ஜீவனின் முதல் உணர்ச்சியை பெறுகிறோம் என்பது போதாது. ஆனால் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறதினால், அந்த விசுவாசத்தினாலேயே, நாம் வளர்ச்சியடைவதற்காக நாம் தொடர்ந்து ஆவிக்குரிய ஆகாரத்தைப் பெற்று அதைத் தனதாக்கிக் கொள்ள வேண்டும். சத்திய வார்த்தையின் மூலமாக பரிசுத்த ஆவியின் நடத்துதலை பின் தொடர்ந்து, விசுவாசித்து நடக்க வேண்டும். விசுவாசத்தின் ஜீவியம், தனிப்பட்ட ஒருவருடைய விவகாரமும், மனதையும் இருதயத்தையும் பற்றினதாயிருக்கிறது. அது நாம் வேதாகமத்துக்குரியது என்று எண்ணும் உபதேசங்களை ஏற்றுக் கொள்ளுவதைவிட மிகவும் மேலானதும், ஆகையால் உண்மையுள்ளதுமாயிருக்கிறது. சத்தியம் என்று நாம் சோதித்தறிந்தவைகளை நாம் உட்கிரகித்துத் தன்மயமாக்குதல்தான் (ஜீரணம் செய்துக் கொள்ளுதல் தான்) அது. அதன் பலனாக அதன் தத்துவங்கள் நம்முடைய தத்துவங்களும், அதன் வாக்குதத்தங்கள் நம்முடைய ஆத்தும உணர்ச்சியுமாகின்றன.

**-Z ’95, 92, 93(R 1798).**

விழுந்துபோன நிலைமையில், கிரியையினால் நித்திய ஜீவனைப் பெற மனிதன் எடுக்கும் முயற்சிகள் ஆபத்தானவைகள் என்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. கிறிஸ்துவின் பலியில் விசுவாசத்தை அப்பியாசிக்கிற யாவருக்கும் நியாயப் பிரமாணத்துக்குப் புறம்பான ஒரு நீதி கொடுக்கப்பட கிறிஸ்துவின் பலி சாத்தியமாக்கியிருக்கிறது. ஆகையால், யாராகிலும், கிறிஸ்துவை ரட்சகராக ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் விசுவாசத்தின் மூலமாக நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறவர்களாக எண்ணப்படுகிறார்கள். இவ்விதமாக நீதிமான் பிழைப்பான், அதாவது, விசுவாசத்தின் மூலமாக நித்திய ஜீவனைப் பெற்றவர்களாக எண்ணப்படுகிறார்கள். பிரதிஷ்டை செய்தவர்களும் கூட விசுவாசத்தினாலே பிழைக்கிறார்கள். அதில் அவர்களுடைய ஜீவியம் தரிசித்து நடவாத வேறுபட்ட ஒரு விசுவாசத்தின் ஜீவியமாக இருக்கிறது. கடைசியாக, எல்லா ஜீவிகளின் நிலைகளிலும் வாஸ்தலமான நித்திய ஜீவன் விசுவாசத்தினால் பெறப்படுகிறது. இவ்விதமாக மூன்று அர்த்தங்களில் நீதிமான் விசுவாசத்தினாலே பிழைப்பான்.

**-P ’34, 31.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

ஆப 2:4; யோவா 3:15,16,36; 5:24; 6:40; ரோம 1:17; 3:19-5:1; 10:4; கலா 2:16-21; 3:5-13, 21-26; எபே 2:8-10; பிலி 3:9; எபி 11:3-39; யாக் 2:17-26.

**கோபுர வாசிப்பு :** Z ’94, 146(R 1652)

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் விசுவாசத்தினால் பிழைத்தேனோ? அதில் உதவியாக அல்லது இடையூராக இருந்தவை எவை? பலாபலன் என்ன?